## தலைப்பு - 201 - பௌத்த அலுவல்கள் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவின விடயங்களுக்காக மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் போதுமாக இல்லையென கருது 201-2-11-2205 அறிநெறி பாடசாலை ஆசிரியர்களை பயிற்சியளித்தல் நிகழ்ச்சி மற்றும் அறநெறி சரசவிய நிகழ்ச்சி செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா 6,500,000 ஆன நிதிபாட்டில் இருந்து ரூபா 2,778,350 தொகை செலவிடப்படாமல் எஞ்சியிருந்துடன் அது 43 சதவீதமாக இருந்தது. | அறநெறி பாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சரஸ்வதி சரசவிய நிகழ்ச்சி திட்டத்தின் செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 6.5 மில்லியன் மாற்றப்பாட்டு மாற்றப்படும் சந்தர்ப்பத்தில் விரிவுரையாளர்களின் பணிகள் மற்றும் நிலையத்திற்கான கொடுப்பனவுகளுக்காக இத்தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் செலவின முகாமைத்துவம் செய்யப்பட்டதன் காரணமாக விரிவுரைகளை நடத்தும் நிலையங்கள் குறைத்தமை, எரிபொருள் சிக்கல் மற்றும் அவ்வாறான நிலையில் விரிவுரைகள் முடிவுறுத்தாமல் நிகழ்நிலை முறைமை ஊடாக | மதிப்பீட்டு நிதிஏற்பாடு போதுமானது அல்ல என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நிதி ஏற்பாடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | விரிவுரைகள் எதிர்பார்த்த செலவினம் குறைவடைந்தமையால் இச்சேமிப்பு இடம்பெற்றது. | |

**2.2 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மார்ச் 11 ஆம் திகதி அரசு அச்சீட்டுத் திணைக்களத்தின் பிரதான கணக்காளரால் திணைக்களத்தின் பிரதான கணக்காளருக்கு எழுதப்பட்ட GP/F./B/01/37 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அரசன் மூலம் நிறைவேற்றப்பட்ட அச்சீட்டு நடவடிக்கைகளுக்காக 2022 திசெம்பர் 31 உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 24,830,199 ஆக இருந்தது. எனினும் அது தொடர்பாக மீளாய்வொன்றை மேற்கொண்டு அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச அச்சீட்டு திணைக்களத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள ரூபா 24,830,199 ஆன கொடுப்பனவு செய்வதற்குள்ள பணம் தொடர்பாக மீளாய்வு செய்து மூன்று மேற்கொண்டு சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அத்திணைக்களத்திடமிருந்து முறையான அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக பதில் கிடைத்தவுடன் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | கொடுப்பனவு செய்வதற்குள்ள பணம் தொடர்பான மீளாய்வென்று மேற்கொள்ளப்பட்டு சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த | எதிர்காலத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஆக்ககபூர்வமான தன்மை தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வு மற்றும் அதன் பிரகாரம் முறைமையை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப் பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களையும் மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு உங்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன் | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதி கூற்றுக்கள் உரிய நேரத்துக்குள் தயாரித்தல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீடு உத்யோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் காரணமாக அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கையை நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் தாமதமாக தவறுதலாக 2021 ஆம் ஆண்டின் செயலாற்று அறிக்கை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பிக்க முடியாமல் இருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள் கோவையின் நிதி பிரமாணம். 103(1)(ஆ) மற்றும் 1642 | வாகனங்கள் தொடர்பாக இடம்பெறும் அனைத்து திடீர் விபத்துக்கள் அருகில் உள்ள பொலிசுக்கு அறிக்கையிட வேண்டியதுடன் அவ்வாறு அறிக்கை இடப்படாவிட்டால் அது தொடர்பாக கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அண்மித்த 03 வருடங்களுக்குள் 03 விபத்துக்கள் தொடர்பாக பொலிசுக்கு அறிக்கை இடாமல் இருந்ததுடன் 02 வாகனங்களுக்குரிய விபத்துக்கள் தாமதமாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமை அடிப்படையில் ஒரு விபத்து தொடர்பில் போலீசுக்கு முறைபாடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அடுத்த இரண்டு விபத்துக்கள் தொடர்பாக முறைப்பாடுகள் தாமதமாக செய்யப்பட்டிருந்தன. | நிதி பிரமாணங்கள் கோவையின் நிதி பிரமாணம் 103(1)(ஆ) மற்றும் 1642 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவு | வாகனங்களின் வெளிப்புற திருத்த வேலைகளின் போது கேள்வி அல்லது விலை விவரங்கள் கோர வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 11 வாகனங்களின் திருத்த வேலைகளுக்காக சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தற்போது நடைமுறை சீராக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் அடுத்த ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் நடபாண்டியன் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்காக காலாண்டு ரீதியில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டு சௌபாக்கிய தூரநோக்கு அரச கொள்கை வெளியீட்டுக்காக செயல் நடவடிக்கைத் திட்டம் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அங்கீகாரம் எழுத்து மூலம் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் அந்த அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கியுள்ளேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |

### 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அறநெறி பாடசாலைகளுக்காக வசதிகளை வழங்குதல் அறநெறி பாடசாலை கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்காக ஆரம்ப மதிப்பீட்டில் ரூபா 75 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் திருத்திய மதிப்பீட்டில் அத்தொகை ரூபா 40.7 மில்லியன் ஆக இருந்தது. அந்த நிதி ஏற்பாட்டில் இருந்து ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த தொகை அதாவது அறநெறி பாடசாலைகளுக்கான கட்டிடங்களுக்காக ரூபா 6 மில்லியனும் உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 4 மில்லியனுமாக ரூபா 10 மில்லியன் மாத்திரம் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | திறைசேரி செயலாளரின் 2022/04/26 ஆம் திகதிய 3/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய செயல் திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தமையால் அறநெறி பாடசாலைக்கான வசதிகளை திட்டமிடுவதற்குரிய செலவின விடயங்களில் சேமிக்கப்பட்டு இருந்தது. | நிறுவனத்தின் நேரடி நோக்களுக்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடடை அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும் |

## 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் செயலாற்று அறிக்கை பாராளுமன்றத்திற்கு 2022 ஆகஸ்ட் 08 ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். தாமதம் காரணமாக 2021 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை உரிய திகதியில் முன்வைக்க முடியாது இருந்தது. | செயலாற்றல் அறிக்கையை உரிய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டு களனி சில்மாதா பயிற்சி நிலையத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 2 மில்லியன் தொகையான செலவினம் செய்ய்பட்டிருந்த போதும் ஆண்டில் 04 நாட்கள் மாத்திரம் பயிற்சி அளித்தல் இடம்பெற்று இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதி விளைவற்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | களனி சில்மாதா பயிற்சி நிலைத்தில் வருடம் பூரா பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் காணப்பட்ட பொருளாதார, அரசியல் சிக்கல் நிலைமை மற்றும் 3/2022 செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்களை மேற்கொள்வது மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினால் குறித்த நிகழ்ச்சிகளை செயல்படுத்த முடியாது இருந்தது. | பயிற்சி நிகழ்ச்சிகளை திட்டமிடப்பட்டு கட்டிடத்தை செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும் |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வாகன விபத்துக்கள் தொடர்பாக விபத்து இடம்பெற்றடன் வாகனத்தை மோட்டார் வாகன பரிசோதகருக்கு / மோட்டார் இயந்திரப் பொறியியலாளருக்கு சமர்ப்பித்து பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் திருத்தங்களின் பின்னர் | காப்புறுதி கம்பனி மூலம் கொடுப்பனவினச் செய்யும் போது தொழில்நுட்ப ரீதியான பரிந்துரைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதால் வேறு தொழில்நுட்ப | வாகனமொன்றை திருத்தம் செய்வதற்கு முன்னரும் பின்னரும் மோட்டார் வாகன |

| | | | |
|---|---|---|---|
| | குறித்த திருத்தங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டதாக சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும் விபத்துக்குட்பட்ட 04 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை | இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மகாநாயக சாரிகாராமய கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்து இந்த அறிக்கை திகதி வரை கையேற்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரித்தை கையேற்பதற்கு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அளவீட்டு நடவடிக்கை களுக்காக அளவை அத்தியட்சகர் (கொழும்பு) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது கையளிப்பிற்குரிய நடவடிக்கைகள் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும். | காணி சட்டரீதியாக கையேற்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | களனி ஈரியவெடிய தசசில் மாதா தலைமையகம் மற்றும் பயிற்சி நிறுவகம் நிர்மாணிக்கப்பட்ட காணியை திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் வணக்கத்திற்குரிய வெலமிடியாவே குசலதம்ம தேரரின் விருப்பம் பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இது வரையில் அக்கையேற்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு சட்டரீதியான உரித்து உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி கையேற்றல் தொடர்பாக காணி அமைச்சின் செயலாளர் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பாக விசாரித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது காணி கையேற்றல் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | காணியை கையேற்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |
| (ஈ) | மரணித்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 முதல் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 114,330 மற்றும் சேவை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த போதும் ரூபா 134,710 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | மரணித்த ஒரு உத்தியோ கத்திடமிருந்து கடன் மீது மரண பணிக்கொடையில் இருந்து அறவிடுவதற்காக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளதுடன் மரணித்த மற்ற பிக்கு அவர்களின் மரண பணிக்கொடைக்கு இன்னும் விண்ணப்பிக்காமையால் கடன் மீதியை மரண பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்காக இயலுமை ஒன்று காணப்படவில்லை. இது தொடர்பாக பொது திறைசேரியிடம் இருந்தும் | கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | | ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்தும் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 44 கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக கருத்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | குறித்த 44 கணக்கு விசாரணைகளில் 10 பிரதான அலுவலகத்திற்கும் பிரதேச அலுவலகங் களுக்கும் உரியதாக இருந்ததுடன் அவற்றுக்கான பதில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. எஞ்சிய 34 விசாரணைகள் தேவாலயங்கள் மற்றும் தேவாலகளுக்குரியதாக இருந்ததுடன் அதில் 5 இற்கு பதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் எஞ்சிய 29 விசாரணைகள் தொடர்பாக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் எதிர்காலத்தில் விஹாரைகள் மற்றும் தேவாலயங்களுக்குரிய கணக்காய்வு விசாரணை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக அந்தந்த பிரதேச அலுவலக மட்டத்தில் உத்தியோகத்தர் ஒருவர் பெயரிடப்பட்டு அந்த உத்தியோகத்தர் மூலம் அவ்வப்போது பின் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்காக விரைவில் கருத்து தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென |

## 5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின பிரகாரம் 05 ஆண்டுகள் ஒரே இடத்தில் சேவை புரிந்த ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் வேறு சேவை நிலையங்களை சேவை புரிவதற்கு இடம் அளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தில் 05 வருடங்கள் முதல் 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றிக் கொண்டிருக்கும் 571 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத இருந்ததுடன் அது 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 752 ஆன திணைக்கள உத்தியோகத்தர்களின் 76% ஆகும். | திணைக்கள மயப்படுத்திய பதவியொன்றான பௌத்த அலுவல்கள் உத்தியோகத்தர்களை, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு விருப்பினை தெரிவிக்கா திருந்தமையால் அந்த இடமாற்றங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த இடமாற்ற கொள்கையின் பிரகாரம் இடமாற்றங்களுக்கு உட்படுகின்றது. அந்த உத்தியோகத்தர்களும் பதவி நிலை உத்தியோகத்தர்களையும் தவிர ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களின் இடம் மாற்றங்கள் பொது நிர்வாக உள்நாட்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சினால் மேற்கொள்ளப் படுகின்றன. திணைக்களத்தில் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் சேவை புரிந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான பதிவேடு ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |